**கரைச்சி பிரதேசசபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்.

### 1.1. நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நித்க் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 08 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரைச்சி பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

மீளாய்வாண்டிற்கென தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையினை சபையின் நிதிக் கூற்றுக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டுக்குரிய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கு காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 3,532,315 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் திரண்டநிதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) நிலையான வைப்பின் மீதான வட்டி வருமானம் ரூபா 155,202 நிதிக் கூற்றுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் சபையின் மீளாய்வாண்டின் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(iii) அலுவலக வாகனத்தின் விபத்தால் 2014 ஆம் ஆண்டில் ஏற்ட்ட நட்டத் தொகை ரூபா 1,214,986 கடந்த இரு வருடங்களுக்கு மேலாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த ரூபா 1,322,038 பெறுமதியான நான்கு மூலதன வேலைத் திட்டங்களின் வேலைப் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்காமையினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.4. செலுத்த வேண்டியவை

மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த முத்திரைத் தீர்வைகள் மற்றும் தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி (NBT) என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 192,740 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்காது 31 திசெம்பர் 2015 இல் நானாவித வைப்புக் கணக்கில் உள்ளது.

### 1.3.5. ஆவணச்சான்றுகள் இன்மை

சபையின் மீளாய்வாண்டிற்கான 02 கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 638,825 பெறுமதியானவற்றுக்கு பொருள் பெறுகைச் சிட்டை, கணிய அளவுச் சிட்டை போன்ற ஆவணங்கள் கணக்காய்வுக்கு கிடைக்காமையினால் அவற்றை திருப்திகரமாக ஏற்று சான்றுப்படுத்தவோ உறுதிப்படுத்தவோ முடியாதுள்ளது.

### 1.3.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| சட்டங்கள், விதிகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்** | |
| (i) பாகம் III இன் பிரிவு 24 | பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் பிரதேச சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) பாகம் IV இன் பிரிவு 108 மற்றும் 132*(ஓ)* | (i) மீளாய்வாண்டில் சபையினது நிதியைப் பயன்படுத்தி ரூபா 4,765,602 செலவில் 11 சனசமூக நிலையக் கட்டடங்கள் உரிய அமைச்சரிடமிருந்து எழுத்து மூலமான முன் அனுமதி பெறப்பட்டிருக்காது நிர்மாணிக்கப்பட்டு இருந்தது.<br><br>(ii) மீளாய்வாண்டில் சபையினது நிதியைப் பயன்படுத்தி ரூபா 558,325 செலவில் உரிய அமைச்சரிடமிருந்து எழுத்து மூலமான முன் அனுமதி பெறப்பட்டிருக்காது 34 சனசமூக நிலையங்களுக்கு பத்திரிகைகள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்தன. |
| **(ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி, நிர்வாக) ஒழுங்கு விதிகள்** | |
| (i) அத்தியாயம் III இன் விதி 66 | வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 5,529,084 இனை அறவிடுவதற்கு சபையின் செயலாளரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் V இன் விதி 140 | ஒரு வருடத்துக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்த நிமித்த முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 27,000 தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் IX இன் விதி 178 *(1)* | பெறுகைச்சபை உருவாக்கப்பட்டிராது சபைக்குரிய 18 கடைகள் மற்றும் சொத்துக்களினை மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கி வருமானமாக கூட்டு மொத்தம் ரூபா 15,292,930 பெறப்பட்டிருந்தது. |
| (iv) அத்தியாயம் VIII இன் விதி 178 (3) | திறமையான ஒப்பந்த வேலைகளைச் செய்கின்ற சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) அத்தியாயம் VIII இன் விதி 178 (5) | கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் போது பதிவஞ்சல் மூலமாக அல்லது தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (vi) அத்தியாயம் IX இன் விதி 180 | காசு மற்றும் களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்** | |
| (i) நி.பி. 104 | சபைக்குச் சொந்தமான வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தமை தொடர்பாக ஏற்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபா 1,214,986 இற்குரிய காரணங்களையும் பொறுப்புக்களையும் கண்டறிய ஆரம்ப விசாரணை மற்றும் இறுதி விசாரணை என்பன முன்னெடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இது பற்றி நாளது வரை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவுமில்லை. |
| (ii) நி.பி. 571 | காலம் கடந்த 38 வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,631,597 தொடர்பாக கடந்த இரு வருடங்களுக்கு மேலாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 49,948,805 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 32,060,433 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமானது ரூபா 17,888,372 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

### 2.2. பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

சமரர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப் பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 17,095,288 விளைந்திருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 556,013 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 16,539,275 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

## 2.3. தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 93,449,565 விளைந்திருந்ததுடன் நேரொப்பமான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 77,877,218 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 15,572,347 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

## 2.4. வருமான முகாமைத்துவம்

### 2.4.1. மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது (ரூபா) | உள்ளபடியானது (ரூபா) | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை (ரூபா) |
|---|---|---|---|
| வீதவரிகளும் வரிகளும் | 150,000 | 1,500 | - |
| வாடகைகள் | 34,498,854 | 29,365,424 | 5,529,084 |
| உரிமங்கள் | 8,155,500 | 7,338,767 | - |
| சேவைகளுக்கான கட்டணம் | 4,520,210 | 4,861,890 | - |
| பற்றாணைச் செலவுகள், குற்றப்பணங்கள, தண்டங்கள் | 14,202,000 | 14,539,194 | - |
| ஏனைய வருமானம் | 9,536,800 | 13,086,361 | 22,139,623 |
| அரசிறை மானியங்கள் | 33,345,132 | 40,598,375 | - |
| **மொத்தம்** | **104,408,496** | **109,791,511** | **27,668,707** |

### 2.4.2. வீதவரிகள்

சபையினால் மீளாய்வாண்டிற்கான ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் வீதவரி அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3. தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 05 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணங்கள் 17.04.2009 ஆம் திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மீளாய்வாண்டில் உரியவாறு அறவீடு செய்ய சபையால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4. முத்திரைக்கட்டணங்கள்

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருந்திருக்க வேண்டிய சபைக்குரிய முத்திதைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 12,368,038 இனை கடந்த 01 தொடக்கம் 04 ஆண்டுகளாக அறவீடு செய்ய சபையினால் நடவடிக்ககைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. முகாமத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டிருந்தன.

(i) வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 33 வாகனங்கள் நாளதுவரை சபைக்கு உடமையாக்கபட்டிராமை அவதானிக்கட்டிருந்ததுடன் சபையின் செயற்பாடுகளிலீடுபடுத்தப்பட்டிருந்த அத்தகைய வானங்களின் உடமை மாற்றம் தொடர்பில் கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்பட்டிக்கவில்லை.

(ii) சபையின் அங்கீகரிக்கப்பட்ட 112 பதவியணியினர்களில் 107 ஆளணியினர்கள் உள்ளனர். இதன் காரணமாக 11 ஆளணயினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய வேலைகள் பாதிப்படைந்திருந்ததுடன் 06 பதவியினர்கள் மேலதிகமாக பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்

### 3.2. சொத்து முகாமைத்துவம்

சபையினால் 07 வாகனங்கள் கடந்த 01 வருடத்திற்கு மேலான காலப்பகுதியில் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கட்டிருந்தன.

(i) கிளிநொச்சி பொது நுலக கட்டடத்திற்குரிய திருத்த வேலைக்கான ரூபா 15,342 செய்யப்படாத வேலைகளிற்கு கொடுப்பனவாக மேற்கொள்ளட்டிருந்தமையானது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

(ii) கிளிநொச்சி பொது நூலகக் கட்டட திருத்த வேலைக்கு ரூபா 22,236 பெறுமதியான மேலதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.4. செயற்திட்டத் தாமதங்கள்

மீளாய்வாண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 105 செயற்த்திட்டங்களின் கூட்டு மொத்தம் ரூபா 34,363,313 அவை நிறைவேற்றப்பட்டிராது சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்குகளில் செலவினமாகவும் காட்டப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

## 3.5. திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூழங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கட்டிருந்தன.

(i) மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம் உள்ளபடியான செலவினம் என்பவற்றுகிடையே ரூபா 159,450 தொடக்கம் 5,634,624 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டிற்குரிய பாதீடு பயனுறுவகையில் தயாரிக்கட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 148,500 தொடக்கம் ரூபா 7,253,243 வரையான வேறுபாடுகள் அவதானிக்கபட்டிருந்தன.

## 4.2 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009 ஆம் திகதிய கணக்காய்வு முகாமைத்துவச் சுற்றுநிருப இல. DMA /2009 1 இன் பிரகாரம் சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கூட்டமெதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

# 5. முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கீழ்வரும் விடயங்கள் மீது விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(i) அரசிறை நிலுவைகளின் அறவீடு

(ii) வாகனங்களின் பயன்படுத்துகை

(iii) ஒப்பந்த நிர்வாகம்

(iv) அரசிறைப் பதிவேடுகள்

(v) ஆளணியினரின் மேற்பார்வை